செ.வெ.எண்: 29 நாள்: 15.09.2020

# கரூர் மாவட்டம்
# பத்திரிக்கை செய்தி
# கரூர் - கால்நடை பராமரிப்புத்துறை
# புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டம்

கோழி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புறக்கடை கோழி வளர்ப்பு திட்டம் 2020-21ம் ஆண்டிற்கு செயல்படுத்திடும் பொருட்டு கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 400 பெண் பயனாளிகள் வீதம் 3200 பெண் பயனாளிகளுக்கு மொத்தம் 80000 கோழிக்குஞ்சுகள் வழங்கிட கீழ்க்கண்ட தகுதிகளுடன் தேர்வு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில் தேர்வு செய்யப்படும் பெண் பயனாளிகள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியவர்களாக இருக்க வேண்டும். சொந்த கிராமத்தில் நிலையாக வசித்து வர வேண்டும். மேலும், ஆதரவற்ற பெண்கள், விதவை, மாற்றுத்திறனாளிகள் மற்றும் தமிழ்நாடு மாநில கிராமப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் சுய உதவிக்குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அரசு விதிமுறைகளின்படி 30% SC, ST பெண் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். மேலும், அரசு வழங்கும் திட்டத்தின்கீழ் இலவச கறவை பசுக்கள், இலவச வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் மற்றும் கோழி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முந்தைய ஆண்டுகளில் பயன்பெற்றவராக இருக்கக்கூடாது.

மேலும், தேர்வு செய்யப்படும் பெண் பயனாளிகளுக்கு 25 எண்ணம் அசில் நாட்டு ரக கோழிக்குஞ்சுகள் இலவசமாக வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் அருகிலுள்ள கால்நடை மருந்தக, கால்நடை உதவி மருத்துவரை அணுகி விண்ணப்பம் அளித்து இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுமாறு கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.த.அன்பழகன் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**